

THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## இதழின் உள்ளே....


☆ ஆசிரியருரை
☆ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
☆ பெண்களுக்கான பகுதி
☆ சிறுவர்களுக்கான பகுதி
☆ வேத அறிவுப் போட்டி
☆ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
☆ நாளும் நடப்பும்



மார்ச் 2007

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 7 கனி 4


## FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer's Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai st.,<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher's Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor's Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar<br>Batlagundu-624 202,<br>Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:28.02.2007 Signature of Publisher.





**THE WORD OF CHRIST**
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA
Phone: 04543 263278 Mobile: 9443558041


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15
"The Churches Of Christ salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 7 மார்ச் – 2007 கனி – 4


ஆசிரியருரை

# மகா தீர்க்கதரிசி

## A Great Prophet



பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் என்பதை நாம் அறிவோம். ஆண்டவர் ஒரு முறை நாயீன் என்னும் ஊருக்குப்போனார்; "அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப்போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள்மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்; வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து: மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று" (லூக்.7:1–17). எந்த ஒரு தீர்க்கதரிசி மூலமாகவும் செய்யப்படாத காரியத்தை இயேசு செய்தபோது, ஜனங்கள் அவரை மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளேதோன்றினார் என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்று வாசிக்கிறோம்.

இச்செய்தியை வாசிக்கும் நண்பரே இயேசுவானவர் வானத்திலும் பூமியிலும் முழு அதிகாரம் உடையவராக இருந்தபடியினாலே மரித்தோரை எழுப்புகிற வல்லமை படைத்தவராகயிருந்தார். ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவருமில்லை. ஆனால் இயேசுவை ஜனங்கள் மகா

தீர்க்கதரிசியானவர் என்று சொன்னார்கள். "யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள்" (யோவா.10:41). யோவான் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தும் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை என்று பரிசுத்தவேதாகமம் சொல்லுகிறது. அப்படியானால் ஒவ்வொரு தீர்க்கதரிசியும் ஒவ்வொரு நோக்கத்தோடு பயன்படுத்தப்பட்டார்கள் என நாம் அறிகிறோம். யோவான்ஸ்நானகனைப் பொருத்தமட்டில் இயேசுவுக்கு முன்னாக வழியை ஆயத்தம் பண்ணும்படியாக அனுப்பப்பட்டவன் என்று காண்கிறோம். "நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்பாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்" என்றான் (யோவா.3:28). மேலும் இந்தப் பெரிய தீர்க்கதரிசி சொல்லுகிறார்; "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்" என்கிறான் (யோவா.3:30,31). இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த இந்த யோவான்ஸ்நானகன் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தும் தன்னை பெருமையாக பேசிக்கொள்ளவிரும்ப வில்லை தம்மைக்குறித்து பிரசித்தம்பண்ணவுமில்லை ஆனால் அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்றார். இன்றைக்கு யோவானைப் பார்க்கிலும் தங்களை பெரியதீர்க்கதரிசிகளாக நினைத்துக்கொண்டு அற்புதங்களையும் அடையாளங் களையும் செய்கிறோம் என்று சொல்லி பூமியை சுற்றி சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள். குருடர் பார்வையடைகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் உயிரோடெழுந்திருக்கிறார்கள் என்று பெரிய பெரிய பேனர்களை கட்டி விளம்பரம் செய்துவருகிறார்கள். ஆனால் யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை என்று வேதம் திட்டமும் தெளிவுமாக சொல்லுகிறது. "யோவான் பிரதியுத்தரமாக: பரலேகத்திலிருந்து ஒருவனுக்கு கொடுக்கப்பட்டாலொழிய, அவ ன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்" என்கிறான் (யோவா.3:27). ஆண்டவர் இயேசுவை பரலோகத்தின் பிதாதாமே முன்குறித்திருந்தார். "நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை" என்கிறார் (யோவா.5:30).

இயேசு தம்முடைய சீஷரை நோக்கி: "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: சிலர் உம்மை யோவான்ஸ்நானகன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறுசிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்; நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றார் (மத்.16:13–17). இயேசுவை ஜனங்கள் தீர்க்கதரிசிகளில் ஒருவராகவே நினைத்தார்கள். அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய பேதுருவோ நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சொன்னான். பிரியமானவர்களே நீங்கள் இயேசுவை யார் என்று எண்ணுகிறீர்கள். அப்போஸ்தலனாகிய பேருது கூறியது போல, அவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.

ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து. "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:3). அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த விதமான பிறப்பைப் நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? அவர் தேவாலயத்திலும் பெரியவர் என்று வாசிக்கிறோம். "தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.12:6). ஜனங்கள் சாலமோன் கட்டின தேவாலயத்தை பெரிதும் மதித்துவந்தார்கள். அதை தேவனுடைய வீடாக கருதினார்கள். ஏனென்றால் எருசலேமைக் கர்த்தர் தம்முடைய நகரமாக தெரிந்துகொண்டார். இருந்தபோதிலும் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. இந்த ஆலயத்தைக் காட்டிலும் பெரியவர் என்று தம்மை அறிமுகம் செய்து கொள்வதை நாம் வாசிக்கிறோம். ஆம் எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே யோனாவிலும் பெரியவர் சாலமோனிலும் பெரியவர் தேவாலயத்திலும் பெரியவர் என பாட்டு பாடுகிறோம். நாம் அவரை பெரியவராகவே கருதுகிறோமா? பெரிய தீர்க்கதரிசியே "அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல" என்கிறான் (யோவா.1:27). நாம் எம்மாத்திரம்? நாம் அவருடைய கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம். ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.

"ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசுதாமே சொல்லியிருந்தார்" (யோவா.4:44). அந்தப்படியாக யூதர்களும் எருசலேம் நகரத்தார் அனைவரும் அவரை ஏற்றுக்கொள்ளாமல் புறம்பாக்கி சிலுவையில் அறையும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். "இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு, யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா?" என்று சொல்லி அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். ஆகையால் தான் ஒரு தீர்க்கதரிசி தன் சொந்த ஊரிலும தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். கொஞ்சங்குறைய தீர்க்கதரிசிகள் எல்லோரும் குடும்பத்திலிருந்தும், ஊரிலிருந்தும் கர்த்தரால் பிரித்தெடுக்கப்படுகிறார்கள். மோசே ஒரு தீர்க்கதரிசி அவர் தேவனால் மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே மரித்து அடக்கம்பண்ணப்பட்டார். எலியா சுழல்காற்றினால் வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் பண்ணப்பட்டார். இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளைக் கொண்டு திருவுளம் பற்றிக்கொண்டுவந்த தேவன் இந்தக் கடைசி நாட்களில் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாக திருவுளம்பற்றியிருக்கிறார். அவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். அவர் உலகத்தில் இருந்தார் உலகம் அவரை

அறியவில்லை. அதைப்போல அவரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளையும் அறியவில்லை. அதைப்போல நம்மையும் அறியவில்லை. ஆகையால் கிறிஸ்தவர்கள் என்றாலே ஒரு வித்தியாசமாக பார்க்கிறார்கள்.

"இப்படியிருக்க பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். வீட்டை உண்டுபண்ணினவர் வீட்டைப்பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அதுபோல மோசேயைப்பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார்" (எபி.3:1–3). யூதர்கள் அவரை ஒரு மகா தீர்க்கதரிசி நம்மில் தோன்றியிருக்கிறார் என்று சொல்லி அவரை ஒரு தீர்க்கதரிசியைப்போல எண்ணி அத்தோடு நின்றுவிட்டார்கள். அன்பானவர்களே நீங்களும் அப்படியாக நின்றுவிடாதீர்கள். அவர் மோசேயைப் பார்க்கிலும் பெரியவர் என்று வாசித்தோம். "கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டகுமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டுதலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம்" (எபி.3:6). மேற்பட்டவர் என்று பார்க்கும்போது எல்லாரிலும் மேலானவர். அவருக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. அந்த அதிகாரம் முழுவதையும் பிதாவாகிய தேவன் அவருக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் கர்த்தருடைய வீடாக, அவர் உங்களிலே வந்து வாசம்பண்ணும் வாசஸ்தலமாக மாறுங்கள்.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.3:20). இந்த ஆண்டவர் இயேசுவின் சத்தம்கேட்டு உங்கள் இருதயக்கதவை திறவுங்கள். அப்பொழுது அவர் உங்களோடு வந்து போஜனம்பண்ணுவார். பரிசுத்தமுள்ள ஆண்டவரோடு போஜனம்பண்ணுவது என்பது லேசான காரியமா? அன்பானவர்களே, அவர் அற்புதர். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். இப்படிப்பட்ட மெய்யான ஆண்டவரை தம் சொந்த இரட்சகராக பெற்ற சகோதர சகோதரிகள் பாக்கியவான்கள். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா.10:9). நீங்கள் இரட்சிக்கப்படவும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவும் உங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

"மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" - அப்.3:22,23

# பரலோகம் உண்டென நாம் ஏன் நம்புகிறோம்

## Why We Believe In Heaven



*J.C.Choate*

நான் பரலோகத்தைப் பற்றி பேசும்போது, நான் வானத்தையோ, மேகங்களையோ அல்லது சுற்றுச் சூழலைப் பற்றியோ பேசவில்லை. நான் முழு வான்வெளியைக் குறித்தும்கூட பேசிக் கொண்டிருக்கவில்லை. சில நேரங்களில் நாம் இவைகளை பரலோகத்திற்கு ஒப்பிடுகின்றோம், ஆனால் நான் நினைக்கின்ற பரலோகமானது தேவன் வாசஞ்செய்கின்ற இடமாகும். பக்தியுள்ள ஆத்துமாக்கள் நித்தியத்தைக் கழிக்கும் ஒரு அழகான இடம், நீதிமான்களின் இருப்பிடம். பரலோகமானது தேவனுடைய வார்த்தையில் புதிய எருசலேமாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வேதவாக்கியங்கள் பரலோகத்தைப் பற்றிபேசுகிறது. நீதியினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவானவர், "சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்.5:12) என்றார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (லூக்.11:2). அவர் அவர்களுக்கு, "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்.6:20,21) என்று அறிவுறுத்தினார். கிறிஸ்து தம்மை தேவனுடைய குமாரனென்று அப்போஸ்தலர்கள் அறிக்கையிட்ட பிறகு அவர்களிடம், "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத்.16:19). கர்த்தர் தாம் போகும் சகலபட்டணங்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே அனுப்பிய எழுபது பேரை நோக்கி: "இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்.10:19,20).

தொடர்ந்து அவர் மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமென அறிவுறுத்தப்படுகிறோம் (லூக்.15:7). இது கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கினவர் எனவெளிப்படுத்துகிறது (யோவா.3:13). இயேசு சீஷர்களுக்கு வானத்திலிருந்து வந்த அப்பத்தைப் பிதாவானவர் கொடுக்கிறார் எனக் கூறுகிறார் (யோவா.6:32). பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்தியவீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" (2கொரி.5:1) என்றார். மீண்டும் கலாத்திய சபை கிறிஸ்தவர்களுக்கு, "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலாத்.1:8) என்றான். சில நாளில் தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையைச் செலுத்தும்படிக்கும் கர்த்தர் வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று பவுல் தெசலோனிக்கேயருக்கு உறுதிப்படுத்தினார் (2தெச.1:7–9). பேதுரு, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார் உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1பேது.1:3,4) என்றான். யோவான், பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது" (வெளி.21:1,2) என்றான். பரலோகம், தேவனுடைய நித்திய வாசஸ்தலம் மேலும் ஆத்துமாவின் வீடு என்பனவற்றைப் பற்றிய வேத பகுதிகள் சிலவற்றை தொடர்ச்சியாக நாம் காணலாம்.

பரலோகத்திற்கு யார் செல்லுவார்கள்? இந்த நாளைக்குறித்து இயேசு ஜனங்களுக்கு, "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:3) என்றார். இதன் அர்த்தமானது, குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகள் அல்லது பொறுப்புள்ள வயதை அடையாதவர்கள், மேலும் அவர்கள் நல்லது கெட்டதை அறியாதிருக்கிறபடியினால், தங்களுடைய செயல்களுக்கு உத்திரவாதிகளாகயிராதபடியினால், அவர்கள் மரிக்கும் போது பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று அர்த்தமாகிறது. கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் காக்கப்பட்டிருக்கும். பவுல், "அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்" (1கொரி.15:24) என்றான். சரீரம் அல்லது சபைக்குக் கிறிஸ்து இரட்சகராயிருக்கிறாரென எபேசியர் 5:23–ல் வாசிக்கின்றோம் (கொலே.1;18; அப்.20:28). இது "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன்

..."கர்த்தர் நிறுத்திக்கொள்வார் எனச் சுட்டிக் காண்பிக்கக் கூடியதாக இருக்கிறது (எபே.5:27). கர்த்தர் எவ்வாறு தம்முடைய தூதர்களை அனுப்பி தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அழிக்கும்படிக்கு அக்கினிச் சூளையிலே போடுவார்கள் என்பதை மத்தேயு13:41–ல் வாசிக்கிறோம். தவிர சபையானது பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ள போகுமானால், அதன் பொருள் நாம் நித்திய ரட்சிப்பை பெற்றிருக்க கண்டிப்பாக சபையில் இருக்கவேண்டும். வேதவாக்கியமும்கூட உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் பரலோகத்திற்குச் செல்லுவார்கள் எனக்கூறுகிறது. கிறிஸ்து, "....நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளி.2:10) என்றார். யாக்கோபு, "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக்.1:12) என்றான். யோவான், 'ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி.22:14) என்று எழுதினார்.

அதே சமயம் இது மற்றவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டார்களென சுட்டிக்காண்பிக்கிறதாக இருக்கிறது. இவர்களோடு சாத்தானும் அவனுடைய தூதர்களும், (மத்.25:41), அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்களும் (மத்.13:41) மேலும் துன்மார்க்கரும் (1கொரி.6:9,10; கலா.5:19–21) சேர்க்கப்படுவார்கள். வெளிப்படுத்தல் 21:8–ல் நாம், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அவருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவர்கள் என்றார்" என வாசிக்கிறோம். மாயக்காரரும் பரலோகத்திற்குச் செல்லமாட்டார்களென நினைவில் கொள்ளுங்கள் (மத்.24:51) மேலும் கடைசியாக, மோசம்போகிறவர்களும் சமயப் பிழையில் நிலைத்திருக்கிறவர்கள் கேடுள்ளவர் களாவார்கள் (2தீமோ.3:13; ரோம.16:17,18).

யார் பரலோகத்தில் இருக்கிறார்கள்? அங்கே தேவன் இருக்கிறார். ஜீவனுள்ள தேவன் வாசஞ்செய்கிற நகரமென பரலோகம் தாமே வர்ணிக்கப்பட்டுள்ளது (எபே.12:22). அங்கே இயேசு கிறிஸ்து இருக்கிறார் (அப்.2:32,33). அங்கே தேவதூதர்கள் இருக்கிறார்கள் (2தெச.1:7–9).

பரலோகம் எதைப் போலிருக்கும்? யோவான் பரலோகத்தைக் குறித்து, "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்: அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட

இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பியது. சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்; இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன், தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவதண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" (வெளி.21:1–7) என்று எழுதினார். தொடர்ந்து வாசிக்கையில், யோவான், "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும், சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்" (வெளி.222:1–7) என எழுதுகிறான்.

நிச்சயமாக, நாம் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகம் முழுவதையும் வாசிக்கையில், பரலோகம் பொன்னாலாகிய நகரத்தின் வீதிகளையும் சகலவித இரத்தினங்களினாலும் மற்றும் வச்சிரக்கல்லாலும் ஆன அஸ்திபாரங்களையுடைய நகரத்தின் மதில்களையும் கொண்டிருக்குமென ஆவிக்குள்ளான யோவான் கூறுவதை நாம் அறிந்திருக்கிறோம். யோவான் வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தை இவ்வாறான வசனங்களில் ஆரம்பித்தார்: "சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" (வெளி.1:1–

3). ஆனபடியினால், மனுஷனாகிய யோவான், இதற்குமுன் ஒரு மனுஷனும் ஒருபோதும் கண்டிராதவைகளைக் காண சக்தியுடையவனாயிருந்தான். பரலோகத்தைக் குறித்தும் அதன் சகல மகிமையைக் குறித்தும் எழுதுவதற்கு, அவன் மனிதனால் புரிந்து கொள்ளத்தக்க வார்த்தைகளிலே எழுதவேண்டியவனாயிருந்தான். ஆனபடியினால், அவன் தான் பார்த்தவற்றை சூசகமான மொழியிலும், அவற்றை இங்கே பூமியிலுள்ள பொருட்களான பொன் மற்றும் விலையுயர்ந்த கற்களோடு ஒப்பிட்டும் அதிகமாக வர்ணித்தார். இவை உண்மையாகவே வர்ணனைக்கும் அப்பாற்பட்டவிதத்தில் மிக அழகுள்ளதாகவும் அற்புதமானதாகவும் இருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகம் எதைப்போலுள்ளது என வாசித்தபிறகு, ஒருவன் தன் மனதில் அழுத்தப்பட்டு அங்கே போக விருப்பம் கொண்டிருந்தால், இன்னும் ஒரு பகுதி சொல்லப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

பரலோகம் ஆயத்தமாக்கப்பட்ட ஜனங்களுக்கென்று ஆயத்தமாக்கபட்ட இடமாயிருக்கிறதென்று சிலர் சொல்லியிருக்கின்றனர். இது தேவனும் அவருடைய ஜனங்களும் என்றென்றும் வாசஞ்செய்யப்போகின்ற இடமாயிருக்கிறது. ஆனபடியினால் மனிதன் இவ்வாழ்வை விட்டு பிரியும்போது உண்மையாகவே அவன் மரிப்பதில்லை. அவன் மாம்சத்தில் மரிக்கிறான், ஆனால் அவனுடைய ஆத்துமா நித்தியநித்தியமாக வாசம்செய்யும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் ஒரு நாளில் என்றென்றும் மரிக்காமலிருக்கின்ற பரலோக வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். இவையெல்லாம் முழுவதும் அறிந்து கொள்ள வரும்போது, நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. ஆனபடியினால் நாம் விசுவாசத்தினால் இதை ஏற்றுக் கொண்டு இது உண்மையான ஒன்றாக மாறும் நேரம் வரைக்கும் உறுதியுடனிருக்க வேண்டும். தேவன் நம்மை வஞ்சிக்கமாட்டாரென்ற முழுநம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஒருபோதும் கண்டிராததும் அல்லது கற்பனை செய்திராததுமான காரியத்தை நமக்கு அருளுவார்.

நீங்கள் பரலோகம் செல்ல விரும்பமாட்டீர்களா? ஒரு நாளில் தேவனோடு வாழ விரும்பமாட்டீர்களா? வாழ்க்கை இப்படியிரக்குமானால் அது எவ்வளவு கோரமானதாயிருக்கும். அங்கே பல பிரச்சனைகளும், தொந்தரவுகளும், தலைவலிகளும் உள்ளன. அங்கே பலவிதமான வேதனைகளும், வலிகளும், துன்பங்களும் உள்ளன. ஆனால் நாம் இவ்வாழ்விற்கு அப்பாற்பட்ட ஒரு சிறந்த உலகத்தை நோக்கும்போது இந்த உலக வாழ்வை எப்படியும் சமாளிக்கமுடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் நீங்கள் கெட்டுப்போன நிலையிலிருக்கிறீர்கள். மேலும் கல்லறைக்கு அப்பால் நம்பிக்கையில்லாவர்களா யிருக்கிறீர்கள். நீங்கள் இதை உணரும் படிக்கும் இதை சரிசெய்து கொள்ள முயற்சி செய்யும்படிக்கும் உங்களுக்காக நான் ஜெபிக்க விரும்புகிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஒரு நாளில் பரலோகத்திற்குச் செல்லும் நம்பிக்கையை பெற்றுக்கொள்ளமுடியும் (மத்.16:16). நீங்கள் இதைச் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சிப்பது மட்டுமின்றி, தம்முடைய சபையிலும் உங்களைச் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). நீங்கள் இன்னும் காலத்தையும் தருணத்தையும் பெற்றிருக்கையில் இதை நீங்கள் செய்வீர்களென நாங்கள் ஜெபிக்கிறோம்.

பெண்கள் பகுதி

# நல்லவராய் இருப்பதே நன்று
## Being "Good" is Good Enough

*-Betty Burton Choate*



எல்லா சமயமும் அடிப்படையில் ஒரே மாதிரியானவையாக இல்லையா? ஒரு மனிதன் நேர்மையாகவும் உண்மையாகவும், ஒரு சிறந்த அண்டைவீட்டானாகவும், ஒரு சிறந்த மனிதனாகவுமிருக்க முயற்சிக்கிறவனாகவும் இருந்தாலே தேவன் அவனை ஏற்றுக்கொள்ளுவார் என அனைத்து சமயங்களும் போதிக்க வில்லையா?

அதிகமாக ஜனங்கள் தனிப்பட்ட விதத்தில் உள்ள நற்குணமே தேவனை திருப்தி செய்ய போதுமானது என நம்புவதையே விரும்புகின்றனர். மேலும் அவர்கள் இது குறித்து தேவன் என்ன கூறுகிறார் என்பதை கண்டுகொள்ளும்படி அவருடைய வார்த்தையை படிக்கின்றதை தவிர்ப்பதையே தெரிந்து கொள்ளுகின்றனர், ஆனால் மாறாக, தங்களை இரட்சித்துக்கொள்ளும்படிக்கு தங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்கின்றார்கள். எப்படியோ, தேவன் அவர்களிடத்தில் அதிகமானதை எதிர்பார்த்தாலும் கூட, அவர் அதிகம் எதிர்பார்க்கிறார், அவருக்குக் கீழ்படியும்படிக்கு தங்களுடைய வீழ்ந்துபோன நிலையை மன்னிப்பார் என்று அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். பிடிவாதமான அறிவீனம் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா? தனிப்பட்ட விதத்திலான நற்குணம் போதுமானதா? "உண்மையாகவே, இந்த அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்; மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே ...."(அப்.17:30,31).

இந்த வசனம், நியாயத்தீர்ப்பின் நாளிலே தேவன் நம்மைக் கேட்டுக் கொண்டதைக் குறித்த நம்முடைய அறியாமைக்காக நம்மை மன்னிக்க மாட்டார் என தெளிவாகக் கூறுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், நாம் கண்டிப்பாக அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவர் கட்டளையிட்டிருப்பதை அவருடைய வார்த்தையின் மூலம் அவர் நமக்குக் கற்பிக்கட்டும்.

நாம் அறியாதிருப்போமானால், நாம் அவருக்குக் கீழ்படியமுடியாது. ஆகவே நாம் கற்றுக் கொள்ளுகிறதான இந்த காரியம் ஒரு கட்டளையாகும். இதை இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்"(யோவா.12:48) என எச்சரித்தார். நாம் அவருடைய எச்சரிப்பைக் கவனிக்க வேண்டும்: அறியாமை நம்மை இரட்சிக்காது!

ஆனால் நாம் நம்முடைய சுயநீதி ஜீவியத்தினால் இரட்சிப்படைய முடியாது ரோம.3:10,23, "அந்தப்படியே, நீதிமான் ஒருவனாகிலும் இல்லை,.....எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி",எனக் கூறுகிறது. ஏசாயா59:1,2–ல், "இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது**" என வாசிக்கிறோம்.

மனிதன் முதிர்ச்சியடைந்து பாவத்தைத் தெரிந்துகொள்ளும் போது, அந்தப் பாவங்கள் அவனுக்கும் தேவனுக்குமிடையே ஒரு சுவர் போலாகி பிரிவினையை உண்டாக்குகிறது. நாம் நம்மை பாவமற்றவர்களாக மாற்றமுடியாது; ஆனபடியினால் நாம் நம்மை மீண்டும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் கொண்டுவர முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் பயிற்சிக்கிற "நற்குணம்" எதுவாயினும் நம்முடைய பாவத்தினால் கறைப்படுத்தப்பட்டதாய் நம்முடைய வாழ்வில் எப்போதும் தோற்றமளிக்கிறது.

**இதற்குப் பரிகாரம் என்ன?**

நாம் 1பேது.2:21–25–ல்"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், **கிறிஸ்துவும் நமக்காகப் பாடுபட்டு**, நாம் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி மாதிரியைப் பின் வைத்துப்போனார். 'அவர் பாவஞ்செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை'(ஏசா.53:9). அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்; நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, **அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்** (ஏசா.53:5). சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும்கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்"என வாசிக்கிறோம்.

மேலும் 2கொரி.5:21, "**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு,** பாவம் அறியாத அவரை **நமக்காகப் பாவமாக்கினார்**" என விளக்குகிறது. ஆனால் நாம் பாவிகளாகயிருப்பதினால், நாம் மீண்டும் ஒரு முறைகூட வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரும்படிக்கும் நம்முடைய பாவங்கள் நீங்கி அவருடைய நீதிக்குள்ளாக நாம் இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக் கொள்ளும்படிக்கும் நாம் ஒரு இரட்சகரைக் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி, நம்முடைய பாவங்களை நீக்கும் படிக்கு இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தில் அவைகளை சிலுவையின் மேல் சுமந்தார். "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று..." ரோம.6:6 விளக்குகிறது.

எப்பொழுது மற்றும் எவ்வழியில் நாம் பாவத்திற்கு மரித்து தேவனுக்கு முன்பாக புது சிருஷ்டியாக மாறி, அவருடைய குமாரனின் நீதிக்குள்ளாக உடுத்து விக்கப்படுகிறோம்? "... கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை

அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்"(ரோம.6:3,4).

நீங்கள் உங்களுடைய சுய நற்குணங்களையே சார்ந்திருக்க அல்லது இரட்சிப்பிற்காக தேவன் எதிர்பார்க்கிறதைப் பற்றிய உங்கள் அறியாமையை சார்ந்திருக்க தீர்மானித்திருப்பீர்களானால், **திரும்பிச் சென்று இக்கேள்வியை மறு ஆய்வு செய்யுங்கள்.** இழந்த நிலையில் தொடர்ந்திருப்பதைத் தெரிந்து கொள்ளாதீர்கள்.

# அத்தேனே - ATHENS

இது கிரேக்க தேசத்திலுள்ள விசேஷமான பட்டணம். இது துறைமுகத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் ஒரு சமவெளியில் கட்டப்பட்டிருந்தது. இந்த வெளியில் உயர்ந்த மேடைகள் இருந்தன. அவைகளில் ஒன்றின்மேல் அத்தேனே தேவிக்கு (விக்கிரகம்) ஒரு கோவில் இருந்தது. இதற்கு அடுத்த இன்னொரு குன்றின்மேல் "மார்ஸ்மேடை" என்ற ஒரு இடமிருந்தது. இவ்விடத்திலே அவர்களுடைய சங்கம் கூடுவது வழக்கம். பிரசங்கம் பண்ணுகிறவர்களுக்கும் இந்த இடம் கொடுக்கப்பட்டது பவுலும் அப்படியே இவ்விடத்தில் பிரசங்கஞ்செய்தான். அப்17:15-34.

அத்தேனே பட்டணத்தில் நாகரீகத்திலும், படிப்பிலும் பேர் பெற்ற கலாசாலைகளும் இருந்தன. இதினிமித்தம் படிப்பாளிகள் வேறு தேசங்களிலுமிருந்து அங்கே போவது வழக்கம்.

***S.Rajaprasath***
***Madurai***

## நாளும் நடப்பும்

- ✳ போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக தமிழக அரசு கொண்டு வர உள்ள மெட்ரோ ரெயில் திட்டம் அரசின் தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்துகிறது என்று தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் எம். கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.
- ✳ மாணவர்கள் உயர் கல்வி பெற்றால் தான் உலக அளவில் முதன்மை நாடாக இந்தியா வளரமுடியும் என்று சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஏ.ஆர்.லட்சுமணன் பேசியுள்ளார்.
- ✳ 2007-ம் ஆண்டிற்குள் 5 செயற்கைகோளை இந்தியா விண்ணில் செலுத்த உள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானி கிருஷ்ணசாமி கூறியுள்ளார்.
- ✳ தேசிய விளையாட்டு போட்டியில் பளுதூக்குதலில் தமிழகவீரர் கோபால்ராஜ் செந்தில்குமார் தங்கப்பதக்கம் வென்றார்.

# ஞான இருதயமுள்ள ஸ்திரீகள்

## The Women that were wise hearted

*-Glory Arjunan*



ஞான இருதயமுள்ள ஸ்திரீகளின் வரிசையில் அடுத்து வருவது அபிகாயில். தீவிரமாகக் கவனிக்க வேண்டிய அவசரக் காரியத்தைக் கவனித்து தன் குடும்பத்தாரைக் காப்பாற்றுகிறாள் (Meeting an emergency and saving her household). ஞான இருதயத்தைக் கொண்டிருந்த இவள் வரவிருக்கும் பொல்லாப்பிற்கு தன் கணவரையும் தன் வீட்டார் அனைவரையும் தப்புவிக்கிறாள். அபிகாயிலின் கணவன் நாபால். இவன் பேலியாளின் மகனாயிருந்தான். அதாவது யோக்கிதையற்ற மகனாயிருந்தான். 2சாமு.23:6–ல் "பேலியாளின் மக்கள் அனைவருமோ, கையினால் பிடிக்கப்படக்கூடாததாய் எறிந்துபோடப்படவேண்டிய முள்ளுக்குச் சமானமானவர்கள்" என்று வாசிக்கிறோம். இப்பேர்பட்ட நபர்களை நெருங்கினால் முள்ளைப் போல குத்தி பதம் பார்க்கக் கூடியவர்களாயிருப்பார்கள். இந்த நாபால் பேலியாளின் மகன் என அழைக்கப்பட காரண மென்ன? 1சாமு.25:14–17 வரை உள்ள வசனங்களில் இவனைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. "அப்பொழுது வேலைக்காரரில் ஒருவன் நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலை நோக்கி: இதோ, நம்முடைய எஜமானுடைய சுகசெய்தி விசாரிக்கத் தாவீது வனாந்தரத்திலிருந்து ஆட்களை ஆனுப்பினான்; அவர்கள் பேரில் அவர் சீறினார். அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினதுமில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற்போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள். இப்போதும் நீர் செய்யவேண்டியதைக் கவனித்துப்பாரும்; நம்முடைய எஜமான்மேலும் நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது; இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார் என்றான்". பாருங்கள் தன்னிடத்தில் சுகசெய்தியை விசாரிக்க வந்த மனுஷரிடம் சீறினார் என வாசிக்கிறோம். அதுமாத்திரமல்ல, அந்த மனுஷர் இந்த நாபாலின் வேலைக்காரர்களுக்கு உபகாரிகளாகவும், மதிலாகவுமிருந்திருக்கிறார்கள். எனவே முள்ளுக்குச் சமானமாயிருந்த இந்த நாபாலுக்கு எதிராக தாவீதும் அவன் கூட்டதாரும் புறப்பட்டனர். இதை அறிந்த நபாலின் வேலைக்காரன் நாபாலின் மனைவி அபிகாயிலிடம் 'நம் எஜமான் மேலும்.... பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது' என்றான். இதைக் கேட்ட அபிகாயில் தன் கணவன் மேலும் தன்னுடைய குடும்பத்தார் மேலும் வரவிருந்த பொல்லாப்பை தடுக்கும் பொருட்டு அவசரமாய் புறப்பட்டு தாவீதினிடத்தில் ஞானமாய் பேசி தன் குடும்பத்தார் மேல் வரவிருந்த பொல்லப்பை தடுத்து நிறுத்தினாள். இது இவளுடைய ஞானமல்லவா!

அன்பு சகோதரிகளே, " புத்தியுள்ள (ஞானமுள்ள) ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" (நீதி.14:1) என நாம் அறிவோம். ஒரு மனிதனுடைய (தாவீதின்) கையில் விழுவது இந்தகுடும்பத்திற்கு தீங்கிழைக்கவிருந்தால், தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமென வேதம்கூறுவதை அறியீர்களா? தாவீதின் குமாரனாகிய இயேசு நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார். நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராகிய இயேசு இன்று நன்மைசெய்கிறவராக இருக்கிறார். நமக்காக ஜீவனையே கொடுக்கவந்த இயேசுவை உன் கணவனும், உம் குடும்பமும் அறிந்து கொள்ளவில்லையா? இயேசு என்றாலே சில குடும்பத்தலைவர்கள் நாபாலைப் போல சீறிவிழுகிறவர்களாகவும், முள்ளைப்போல் குத்துகிறவர்களாகவும் இருக்கலாம். அன்பு சகோதரியே, ஒருவேளை நீங்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பீர்களென்றால் இயேசுவின் மூலம் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள், இயேசுவையும், பிதாவை பிரியப்படுத்தக்கூடிய வற்றையே செய்யுங்கள். கர்த்தருடைய கற்பனைகளின் படி நடந்து வீட்டை கட்டுங்கள். ஞானமுள்ளவர்களாயிருப்பீர்களென்றால் நிச்சயமாகவே உங்கள் வீட்டை அதாவது குடும்பத்தைக் கட்டமுடியும். புத்தியற்றவர்களாயிருந்தால் நிச்சயமாக உங்களாலேயே உங்கள் குடும்பத்துக்கு, பொல்லாப்பும் தீமையும் வரும்.

சகோதரியே, ஒருவேளை நீங்கள் கர்த்தருடைய சமாதானத்திற் கேற்றவைகளை நாடாமல் நீங்களே உங்கள் குடும்பத்தின் மேல் வரவிருக்கும் பொல்லாப்பிற்கும், தீமைக்கும் காரணமாயிருப்பீர்களானால், இன்றே மனந்திரும்புங்கள். அந்த அபிகாயில் புத்தியாய் தாவீதினிடத்தில் சமாதான வார்த்தைகளை பேசியதைப் போல (1சாமு.25:23–35). இயேசுவை ஏற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் பொல்லாப்புக்கு நீங்கலாகும்படி தேவனோடே ஒப்புரவாகுங்கள். இயேசு சீக்கிரமாய் திரும்ப வரப்போகிறார். அவர் உங்களுக்காகவே ஜீவனைக் கொடுத்து உங்களுக்கு நன்மை செய்தாரே. நீங்கள் இதுவரை கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவராய் இருந்தால் இன்றே அவரை விசுவாசித்து, அவரே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது இயேசு தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்ளுவார். நீங்கள் பொல்லாப்புக்கு நீங்கலாகி காக்கப்படுவீர்கள். ஒரு வேளை உங்கள் கணவனும் குடும்பத்தாரும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களுக்காக இயேசுவின் மூலம் தேவனை நோக்கிக் கெஞ்சுங்கள். அந்த அபிகாயிலைப்போல மிகக் கவனமாக அவசரமாக இரட்சிப்பின் செய்தியை அவர்களுக்கு அறிவித்து உங்கள் கணவனையும் உங்கள் குடும்பத்தையும் வரவிருக்கும் பொல்லாப்பிற்கும் ஆக்கினைக்கும் தப்புவியுங்கள். "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்" (2தெச.1:7,8).

தாவீதைக் குறித்து, அவர் செய்த நன்மைகளைக் குறித்தும் அறியாது பொல்லாப்புக்கும் தீமைக்கும் உள்ளாகவிருந்த நாபாலையும் அவன் குடும்பத்தாரையும் காப்பாற்றிய செயல் ஒரு ஞானமுள்ள செயலல்லவா! அந்த ஞான இருதயமுள்ள ஸ்திரீயாகிய அபிகாயிலைப் போல நாமும் ஞான இருதயமுள்ள ஸ்திரீகளாக செயல்படும் படி தேவன் தாமே உதவிசெய்வாராக!

## ஜெபியுங்கள்



- ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் 26வது வாசகர் கருத்தரங்கிற்காக ...
- நம்முடன் இணைந்து பணியாற்றுகிறவர்களுக்காக ...
- கர்நாடகா மற்றும் தமிழர்களின் தண்ணீர் பிரச்சனை முடிவுக்கு வர...
- சகோ. மனாசே மண்ணு அவர்களின் குடும்ப ஆறுதலுக்காக ...
- ஆந்திரா ஊழியங்களுக்காக ...



**வேத அறிவுப்போட்டி எண் 78-ன் விடைகள்**

1.நிக்கொதேமு -யோவா.19:39, 2. யோசுவா -யோசு.10:13, 3. மோசே - அப்.7:23, 4. தேவதூதன், மனோவாவை- நியா.13:16, 5. நித்திய அழிவாகிய- 2தெச.1:10, 6. கோலியாத்-1சாமு.17:24, 7. சாத்தானை-1தெச.2:18, 8. யோய்தா, அத்தாலியாளை-2இரா.11:15, 9.பவுல்,ஒநெசிமுக்காக, பிலேமோனை- பிலே.9 , 10. தாவீது -1நாளா.17:20.

**வேத அறிவுப்போட்டி எண் 78-ல் வெற்றிபெற்றவர்கள்**

N. ஜான் செல்லையா -செட்டிபாளையம்
A. இம்மானுவேல் -கடலூர்
A. ஆனந்த் -நாகமலை புதுக்கோட்டை
C. ஜாய் கிறிஸ்டினா -நாகமலை புதுக்கோட்டை
E. ஜோசப் தேவதாஸ் -நாகமலை புதுக்கோட்டை
Mrs. ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ்- மதுரை
P.S. லலிதாபிரேமகுமாரி - மதுரை
P. சரவணக்குமார் -கோபி
P. அலிஸ்மேரி -வத்தலக்குண்டு
N. கமலவேணி -சென்னை
J. நிர்மலாஜான் -மதுரை
G.P. ஏசையன்ராஜ் -கோபி

"...கர்த்தருடைய கற்பனை தூய்மையும் கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது"
சங்கீதம் 19:8

## தாங்கள் பாவி என்று ஒப்புக் கொண்டவர்களில் சிலர்

*-M.Rajamani*

| | |
|---|---|
| 1. பார்வோன் | -நான் பாவம் செய்தேன் (யாக்.9:27) |
| 2. சவுல் | -நான் கர்த்தருடைய கட்டளையை மீறினதால் பாவஞ்செய்தேன் (1சாமு.15:24) |
| 3. தாவீது | -நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் |
| 4. பிலேயாம் | - நான் பாவம் செய்தேன் (எண்.22:34) |
| 5. நெகேமியா | -நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவம் செய்தோம் (நெகே.1:6) |
| 6. சீமேயி | -நான் பாவஞ்செய்தேன் என்று அறிந்திருக்கிறேன் (2சாமு.19:20) |
| 7. மீகா | -நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் (மீகா.7:9) |
| 8. ஆகான் | -நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன் (யோசு.7:20) |
| 9. செக்கனியா | - நாங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம் (எஸ்.10:2) |
| 10. பவுல் | -பாவிகளில் பிரதான பாவி நான் (1தீமோ.1:15,16) |
| 11. யூதாஸ் | -குற்றமில்லாத இரத்தத்தை காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் (மத்.27:4) |
| 12. பேதுரு | -ஆண்டவரே நான் பாவியான மனுஷன் (லூக்.5:8) |
| 13. இளைமகன் | - தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் (லூக்.15:18,19) |
| 14.ஆயக்காரன் | - தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் (லூக்.18:13) |

"நமக்குப் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் சத்தியம் நமக்குள் இராது"
1யோவான் 1:8

# அங்கே ஓர் ராஜ்யம்

## There is a Kingdom

என் சிநேகிதியே, அங்கே ஓர் ராஜ்யம்
பகல் அல்லது இரவு
காணப்படாத இடம் அது
இடைவெளி தூரங்கள்
அளவிடப்படாத இடம் அது
உணர்ச்சிகளின் மையமாகிய எந்த இருதயமும் தனியாக நடக்க முடியாத
கண்ணீரால் இன்னொருவரின் கண்களை நிரப்புகிற
உனது துயரத்தின்
பாரம் நிறைந்த இடது அது
உனது சிரிப்பின் எதிரொலி
உதடுகளிலிருந்து வடிகிறது என்றென்றும் பிரியமே;
பிதாவினிடத்திற்கு
நீ தைரியமாய் கொண்டு செல்லும் ஒவ்வொரு கனவும்
வளர்கிறது இன்னொருவரின் இருதயத்திற்குள்
அந்த கரங்கள் பலத்துடன்
உதவுகிறது உனக்கு
தூரத்தில் இலக்குகளை நீ அடைவதைப் போல்;
வெற்றி அல்லது அழிவு இல்லா இடம் அது
காலத்தினால் நாசம் உருவாக்கப்படாத இடம் அது,
வறுமை அல்லது செல்வம்
அன்பின் மேன்மையை பாதிக்க முடியவில்லை
ஒருவர் மிகக் கெம்பீரமாக
சிந்தையில் வைத்துள்ள இடம் அது
ஆண்டுகள் அதிவேகமாய் பறக்கையில்
ஆழமான அழகுடன் தகதகவென பிரகாசிக்கிறது
இளமை முழுதும் கடந்து போகையில்
மலையின் மேலே இருக்கும்
இரு இருதயங்கள்
வரப்போகும் முடிவினை ஆராயலாம்
பிரியமே, அங்கே ஓர் ராஜ்யம்
ஒரு சிநேகிதியின் இருதயதுடிப்பினுள்.

-Betty Burton Choate

கிறிஸ்துவ தலைமைத்துவ பயிற்சி பாடங்கள்
Christian Leadership Training Course

பாடம் - 14

# வாடகை பிரசங்கியார்

## The Hireling Preacher

J.C.Choate

கடந்த இரண்டு மூன்று பாடங்களில் பிரசங்கியாரையும் பணத்தையும் பற்றி படித்தோம். இது மிகவும் முக்கியமானது அநேக பிரசங்கியாருக்கு பணத்தைக் குறித்த பிரச்சனை இருக்கிறது. இன்றைக்கு படிக்க போகிற பாடம் இதை இன்னும் நிரூபிக்கும் ஒரு பிரசங்கியார் சம்பளம் வாங்குவது நிச்சயமாகவே தவறல்ல. ஆனால் கொஞ்சம் பணத்திற்காக அவர் தன்னுடைய இருதயத்தையும் ஆத்துமாவையும் விற்பது தவறு. அப்படிச் செய்பவர் யாராவது என் நினைவுக்கு வந்தால் அது 30 வெள்ளி காசுக்காக இயேசுவைக்காட்டிக் கொடுத்த யூதாசையே நினைவூட்டும். அவன் தற்கொலையில் முடிந்தான். பிரசங்கத்திற்காக வாங்கப்படுகிற பிரசங்கியாரும் உண்மையாகவே ஆவிக்குரிய தற்கொலை செய்கின்றார். கொலை ஆனால் பிரசங்கிப்பதற்காக சம்பளம் வாங்கப்படுவதற்கும் வெறுமனே வேலைகள் செய்வதற்காக வாங்கப்படுவதற்கும் என்ன வித்தியாசம்? நிச்சயமாகவே இந்த கேள்விக்கு முன்னமே உங்களுக்குப் பதில் தெரியும் உண்மையாய் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு பிரசங்கிக்க வேண்டும் என்ற விருப்பத்தோடு பிரசங்கிப்பதற்கு கொடுக்கப்படும் சம்பளம் ஒருவகை ஆனால் பிழைப்புக்காக மட்டுமே பிரசங்கித்து பணம் வாங்குவதென்பது இன்னொரு வகை.

நான் அநேகம்தரம் அநேகரை 'கிறிஸ்துவின் சபைக்கு மாற்றுவதற்கென்று' தங்களை உண்மையாக ஒப்புக்கொடுத்து தங்களை பிரசங்கியார்கள் என்று சொல்லி முழுநேர உதவிகிடைத்தால் அப்படி செய்வேன் என்றும், அப்படி கிடைக்கும் பட்சத்தில் இரண்டு மூன்று சபைகளைக் கூட மாற்றுவதற்கு முடியும் என்றும், சொன்னவர்களை சந்தித்திருக்கிறேன். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவர்கள் வேறு சபைகளில் ஊழியம் செய்கிறார்கள் என்றும். நான் அவர்களுக்கு சம்பளம் கொடுத்தால் அந்த சபைகளை அவர்களோடு கொண்டு வந்துவிட முடியும் என்றும் சொன்னார்கள். அதனுடைய அர்த்தம் என்ன வென்றால் முன்பு அவர்கள் இருந்த நிலையை விட்டு (சம்பளம் கிடைக்கும்) அந்த நேரத்திலிருந்து தங்களைக் கிறிஸ்துவின் சபையார் என்று அழைத்துக் கொள்வார்கள். இப்படியிருக்கும் பட்சத்தில் அவர்கள் தண்ணீரில் முழ்க சம்மதித்து மற்ற தேவைகளுக்கேற்ப மாற்றங்களை செய்து கொள்வார்கள். இந்த விதமான காரியங்கள் அவர்கள் எப்படிபட்ட மனிதர்கள் என்று யோசிக்க வைக்கும். இந்த விதமான பேரத்திற்கு எந்த விதமான சபை சம்மதிக்கும்? இயல்பாகவே எனக்கு அவைகளில் ஆர்வமில்லை. இந்த விதமாக இருக்கும் பட்சத்தில் அந்தப் பிரசங்கியாரையும் சபைகளையும் பற்றி ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களுக்கு உண்மையான மனமாற்றமுமில்லை மனச்சாட்சியுமில்லை. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய ஆத்துமாக்களையே பணத்திற்காக விற்றுப்போடுவார்கள். இந்த விதமான காரியங்கள் உங்கள் இருதயங்களை உடைக்கிறது. ஆனால் இது சம்பவிக்கிறது. இயேசு ஆட்டுத் தொழுவத்தைப் பற்றியும், தொழுவத்திற்கான வழியைப்பற்றியும் நல்லமேய்ப்பரைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். ஆட்டுத்தொழுவம் என்பது சபை, தொழுவத்திற்கான வாசல் ஒரே வாசல், நல்ல மேய்ப்பர்

கிறிஸ்து சபைக்குள் செல்ல யார் வழி? (யோவான் 14:6). இப்பொழுது கிறிஸ்து சொல்வதைக் கேளுங்கள் "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவ னாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்"... (யோவான் (10:11–14) என்று கிறிஸ்து சொல்லுகிறார்.

தயவு செய்து கவனியுங்கள் அவர் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கவும் சித்தமுள்ளவராக இருக்கிறார். இங்கே ஆடுகள் சபை அல்லது கிறிஸ்தவர்களைக் குறிக்கும். பவுல் பின்வருமாறு (அப்போஸ்தலர் 20:28) எபேசு சபையில் உள்ள மூப்பர்களுக்கு சொல்கிறார். "ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" பவுல் இங்கே சபையை மந்தையாகவும், கிறிஸ்துவே மந்தையை அல்லது சபையை அவருடைய சொந்த இரத்தத்தினால் வாங்கியதாகவும்குறிப்பிடுகிறார். அந்த அர்த்தத்தில் தான் நல்ல மேய்ப்பர் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறார் என்று சொல்கிறார்.

கிறிஸ்துவும் கூலிக்காரனைப்பற்றி பேசுகிறார். கூலிக்காரன் மேய்ப்பன் அல்ல என்று இயேசு சொல்கிறார். ஆடுகள் அவனுக்குச் சொந்தமல்ல ஆகவே கூலிக்காரன் ஓநாயோ அல்லது பகைவனோ வரும் போது ஆடுகளை பாதுகாப்பற்ற தனிமையில் விட்டு விட்டு போய்விடுகிறான். இந்த இடைவெளியில் ஓநாய் அல்லது பகைவன் ஆடுகளைப் பிடித்து சிதறடிக்கிறான் என்றும் இயேசு சொல்கிறார். வேறு வார்த்தைகளில் சொன்னால் அவன் மக்களை வஞ்சித்து அவர்களைப் பிரித்து விடுகிறான். மேலும் கூலியாள் கூலிக்காரனாயிருக்கிறபடியினாலும் ஆடுகளைப்பற்றிய கவலை அவனுக்கு இல்லாதபடியினாலும் இப்படிச் சம்பவிக்கிறது என்று இயேசு மேலும் விளக்குகிறார். தீமையினின்று அவைகளை பாதுகாக்கும்படி அவன் காத்திருப்பதில்லை. இதுவே உண்மையாய் மனந்திரும்பாமல், சபை அங்கத்தினர் மீது கரிசனம் இல்லாத, கூலிக்காக அமர்த்தப்படும் பிரசங்கியார்கள் மற்றும் போதகர் விஷயத்தில் இதுவே உண்மை. எல்லாம் நன்றாகவே நடந்து அவர்கள் சம்பளத்தையும் பெற்றுக் கொண்டால் அவர்கள் வேலையிலிருப்பார்கள் ஆனால் ஒரு பிரச்சனை எழுந்தாலோ அல்லது கேள்வி கேட்கப்பட்டாலோ அந்த வாடகைப் பிரசங்கியார் சபையை பிரிக்கப்பட்டு சிதறடிக்கப்பட்டு தொலைந்து போகும்படியாக சபையைக் கள்ள போதகர் வசம் விட்டு விட்டு, மறைந்து விடுவார்கள். கிறிஸ்து சொல்கிறார்; நல்ல மேய்ப்பனுக்கு ஆடுகளையும் ஆடுகளுக்கு அவனையும் தெரியும். இன்றைய உலகில் கூட கர்த்தருக்கு அவருடைய ஜனங்களையும், ஜனங்களுக்கு அவரையும் தெரியும், ஆகவே அவர் அவைகளை விட்டு விலகவும்மாட்டார் கைவிடவும் மாட்டார்.

வாடகைப் பிரசங்கியாரைப் பற்றி வேறுவிதமாக பார்ப்போம். அவன் ஒரு வேளை கிறிஸ்துவுக்குள் நம்பிக்கை உள்ளவனாக வந்திருக்கலாம், ஆனால் அவனுக்கு அநேக சபைகள் உண்டு என்றும் ஒவ்வொன்றும் ஒன்றைவிட ஒன்று நல்லதென்றும்

போதிக்கப்பட்டி ருக்கலாம். வேலை தேவையாயிருப்பதாலும், தன்னை ஒரு முழுநேர ஊழியனாக நினைத்து அவன் தான் சந்திக்கிற அநேக சபைகளுக்கு தன்சேவையை அளிக்கலாம். இப்படிப்பட்ட மனிதன் விசேஷமாக வெளிநாட்டுக்காரர்களை எளிதாக ஏமாற்றலாம் என்ற நம்பிக்கையில் அவர்களிடமாக ஈர்க்கப்படலாம். அவர்கள் வித்தியாசமான சபையிலிருந்து வந்திருக்கும் பட்சத்தில் கிறிஸ்துவின் சபையில் கூட ஒரு வேளை அவர் மனமாற்றமடைந்து, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு பயிற்சி கூட பெற்றிருக்கலாம். ஆனால் அவன் குறிப்பிட்ட சபையில் பிரசங்கியாராக இருக்கும்படி பயிற்சியளிக்கப்பட்டிருப்பதால் அவன் தொடர்ந்து அந்த போதனைகளையே எந்த சபையிலிருந்தாலும் போதிக்கலாம். காரியங்கள் சரியாக ஒரு சபையில் நினைத்தப்படி நடக்காவிட்டால் விரைவாக வேறுசபைக்கு மாறிவிடலாம்.

இந்த விதமான காரியத்தை எவ்விதமான மனிதனால் செய்யமுடியும்? வாடகையாளாரால் மட்டுமே. ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்கு மக்கள் மாறுவது உண்மைதான் ஆனால் பொதுவாக தாங்கள் தவறான உபதேசத்திலிருப்பது உணர்த்தப்பட்டு மனந்திரும்பி சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கும் கிறிஸ்துவின் சபை அங்கமாவதற்கும் அப்படிச் செய்யலாம். ஆனால் அந்த மாற்றம் இருதயத்தை பொருத்ததே தவிர சம்பளம் கொடுப்பவரை பொருத்ததாக இருக்கக் கூடாது. பணத்துக்காக தன்னுடைய ஆவிக்குரிய ஐக்கியத்தை விற்பது உண்மையாகவே மிகவும் கீழானது ஆகும். ஆகவே கூலிக்காரன் கூலிக்காகவே இருக்கிறான் அவனுக்கு இதயம் இல்லை, உண்மையான மனமாற்றம் இல்லை, ஒப்புக்கொடுத்தல் இல்லை. அவன் ஒரு சபையிலிருந்து இன்னொரு சபையில் சற்று அதிக பணம்கிடைக்கும் என்றால் சிரமமின்றி தாவி விடுவான். அவன் எப்பொழுதும் அதிகமாக பணத்தையே நோக்கிக் கொண்டிருப்பான்.

சில சமயங்களில் அநேக பிரசங்கியார்கள் ஒரு சபையை விட்டு இன்னொரு சபைக்குப் போவதை நாம் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் தாங்கள் நாமகரண சபையிலிருந்து உபதேசத் தவறுகளை உணர்ந்து மனந்திரும்பி கிறிஸ்துவின்சபையின் அங்கமாகும்படி உண்மையாய் மனந்திரும்பியிருப்பார்கள் என்பது சந்தேகம். ஒரு பிரசங்கியார் அவ்வப்போது தன்னுடைய தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்வது கூடாத காரியமல்ல என்றாலும் பொதுவாக அதிக எண்ணிக்கையில் பிரசங்கியார்கள் தங்கள் மார்க்கத்தை மாற்றிக் கொள்ளும்போது அது அவர்கள் சார்ந்திருந்த மார்க்கத்தில் அவர்களுக்கு உள்ள கசப்பினாலும் அல்லது மற்ற இடத்தில் அதிக சம்பளமோ அல்லது வேறு வசதிகளோ கிடைக்கும் என்ற உள் நோக்கத்தோடும் மாறுவார்கள்.

என் நண்பனே நீ ஒரு கூலிக்காரன் அல்ல என்று நான் நம்புகிறேன். அப்படியிருந்தால் நீ மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்படி. நீ யாருக்குப் பிரசங்கிக்கவேண்டும் என்று திட்டமிடுகிறாயோ தேவனுடைய சித்தம் இன்னது என்று நன்றாகக் கற்று கீழ்ப்படிந்து நடைமுறையிலிருக்கிற ஒரே உண்மையாயிருக்கிற கிறிஸ்துவின் சபையில் அங்கமாகும்படி நான் உன்னை கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அப்போஸ்தலர் (2 –ம் அதிகாரம்).

# ஆபிரகாமின் கூடாரம்

ஆபிரகாம் மம்ரேயில் அமைத்திருந்த கூடாரம் நாற்பது மீட்டர் நீளம் கொண்டது. இவருடைய கூடாரத்தை சுற்றிலும் இவருடைய பணியாளர்கள் மற்றும் மேய்ப்பர்களுக்கான கூடாரங்கள் நூற்றுக்கணக்கில் அமைக்கப்பட்டிருந்தன. சதுர வரிசைகளில் ஒழுங்கும் கிரமுமாக ஒரு திட்டமிடப்பட்ட கிராமம் போல இவர்களது குடியிருப்பு அமைந்திருந்தது. கூடாரத்தை சுற்றியுள்ள நிலங்களை விவசாயத்திற்காக பயன்படுத்தினார்கள். கூடாரத்தின் உட்புறம் குளிர் தாக்காதபடிக்கு கருப்பு வெள்ளாட்டின் ரோமத்தால் அமைக்கப்பட்டிருந்தது. உட்புறம் அமைக்கப்பட்டுள்ள இந்த கம்பளி அமைப்பு நீரை உள்ளே விடாமலும், குளிர்தாக்காமலும் பாதுகாக்கும். கூடாரத்தின் உள்ளே இரண்டு அறைகள் இருந்தன. ஒன்று ஆண்களுக்கானது. இது முன்புறவாசலுடன் இணைந்திருக்கும் உள்ளறை பெண்களுக்கானது.

*S. Prabakaran*
*Namakkal*

# பொது அறிவு சோதனை

1. சாணக்கியர் எழுதிய நூல்?

ஆ) அர்த்த சாஸ்திரம் இ) ஆகமங்கள் ஈ) இதிகாசம்

2. காஷ்மீர் வரலாற்றை அறிய உதவும் நூல்?

அ) ராஜதரங்கிணி ஆ) காஷ்மீர் சரித்திரம் இ) தன்வந்திரி

3. குப்தர்கள் காலத்தில் இந்தியா வந்த சீன யாத்திரிகன்?

அ) மெகஸ்தனிஸ் ஆ) பாகியான் இ) யுவான்சுவாங்

4. ரோமாபுரிக்கும் தமிழகத்திற்கும் வாணிகத் தொடர்பு இருந்தமையை உணர்த்தும் நாணயம்?

அ) அரிக்கமேட்டில் கிடைத்த நாணயம் ஆ) ஆதிக்க நல்லூரில் கிடைத்த நாணயம் இ) சின்னமனூரில் கிடைத்த நாணயம்

5. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றி அரசுகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

அ) முடியாட்சி ஆ) குடியாட்சி இ) மகாஜனபதங்கள்

**விடைகள்: 1. அர்த்த சாஸ்திரம் 2. ராஜதரங்கிணி 3. பாக்கியான்**
**4. அரிக்கமேட்டில் கிடைத்த நாணயம் 5. மகாஜனபதங்கள்**

# சரீர மீட்பு

- Gem Robert

பரிசுத்தமானவரின் – இயேசு
பாதம் அமர்ந்து தொழுவோம்

பாவங்களை கழுவி – சாபங்களை போக்கி
பரிசுத்தமாக்கினார் – இயேசு

அல்லேலூயா துதிபாடிடுவோம் – தேவ
ஆலயத்தில் பணிசெய்திடுவோம்....

சகலத்தையும் அறிவரே..... சர்வ வல்லவர்
சாந்த குணம் கொண்டவரே ஏற்றுக்கொள்வார்

ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி – நாம்
அனுதினமும் காத்திருப்போம் (அல்லேலூயா)

இமை பொழுதோ.... நடு இரவோ.....
எப்போது வருவார் யாம் அறியோம்

விழித்திருந்து.... ஜெபித்திடுவோம்....
விரைந்தவர் வந்திடுவார்..... (பாவங்)

சங்கடத்தை போக்குவார்....
சமாதானம் தருவார்....

சதா காலம் முழுவதுமே!
சந்தோஷம் போக்கிடுமே! (பாவங்)

அழுகையில்லை.... வேதனையில்லை....
ஆவியானவர் நம்மோடிருக்கும் போது

ஆவலோடு.... ஆர்ப்பரித்து.... ஆண்டவருடனே
ஆகாயம் சென்றிடுவோம்.... (அல்லேலூயா)

கவிஞர் – ராபர்ட் ஜிம்
தஞ்சை கிறிஸ்துவின் சபை

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-2

சரித்திர ஆய்வு

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 9841017621

கி.பி.100–ல் 45 கோடி உலக மக்களில் 360 பேரில் ஒருவர் கிறிஸ்தவர். கி.பி.200–ல் அதுவே 200 பேருக்கு 1 கிறிஸ்தவராகவும், கி.பி.1500–ல் 69 பேருக்கு ஒருவர் கிறிஸ்தவராகவும், 1900–ல் 27 பேருக்கு ஒருவர் கிறிஸ்தவராகவும், 1950–ல் 21 பேருக்கு ஒருவர் கிறிஸ்தவராகவும்,1990–ல் 7பேருக்கு ஒருவர் கிறிஸ்தவராகவும், 2006 முடிவில் உலக மக்கள் தொகையானது 612 கோடி மக்களில் மூன்றில் ஒருபங்கு கிறிஸ்தவர்களாக இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடையலாம், ஆனால் கடந்த 2000 ஆண்டுகளாக கிறிஸ்தவர்கள் தங்களின் விசுவாசத்தை காத்திட பட்ட பாடுகளும், உபத்திரவங்களும் என்னால் சொல்ல முடியாது, ஆனால் கி.பி.70 முன்பு எழுதப்பட்ட எபிரெயர்11:33–38 அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள்.... அவர்கள் சிதறுண்டு அலைந்தார்கள்" இவ்வாறக பாடுபட்டு மரித்த மக்களின் தொகை எவ்வளவாய் இருக்கும் என்பதை நீங்களே தீர்மானித்து, தியானித்து, இன்னும் இரட்சிக்கப்படாத 400 கோடிமக்களை கிறிஸ்துவின் சபையில் கொண்டுவர நீர் என்ன விலைக்கிரயம் தரப்போகிறீர்கள்? தாவீதைப்போல நாமும் "நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்" (சங்.118:17). ஒருவேளை இச்சேவைக்காக மரித்தோமானால் "....அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" எபி.11:4 (இங்கு உங்களின் பெயரும் குறிப்பிடும்படியாக இருக்கலாம்!) 2007–ம் ஆண்டில் பிரவேசித்திருக்கிற நீங்கள் இவ்வாண்டில் கிறிஸ்துவின் சபைக்காக என்னத்தை செய்யப்போகிறீர்கள் என்பதை எங்களுக்கு கடிதம்மூலம் தெரிவியுங்கள். அல்லது தொலைபேசியில் பேசுங்கள். ஜெபியுங்கள். இன்றே திட்ட மிடுங்கள்!

பவுலடியார் தன்காலத்திலே எந்தவிதமான வாய்ப்பு வசதியில்லாதபோது தனிமனிதனாக .... "கொஞ்சம் குறைய ஆசியா எங்கும் (ஆசியா கண்டமானது எல்லா மதங்களும் உண்டான, மதங்களின் தொட்டில் எனப்படும்) அனேகஜனங்களுக்கு போதித்தான். "அப்.19:23–40; கிறிஸ்துவுக்காக ஆயிரக்கணக்கானவர்களை ஆதாயப்படுத்தினான். பவுலடியார் சிறையில் இருந்தபோது சிறையிலிருந்தவர்களையும், காவலர்களையும், தன்னை கைது செய்த இராயனுடைய அரண்மனையில் இருந்தவர்களையும் கூறும்போது கிறிஸ்துவுக்குள்ளானவர்களை வாழ்த்துகிறார்கள் என்றார். அப்படியானால், இன்று , உலக மக்களுக்கு (பிலி.4:22) உங்களின் புத்தாண்டு வாழ்த்துதல் எப்படி? யார், யாரை கிறிஸ்துவுக்குள்ளாக ஆதாயப்படுத்தப் போகிறீர்கள்? கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று (1கொரி.15:58) அறிந்து செயல்படுவோமாக!

**சிறுவர் பகுதி**

# ரெபெக்காள்

*வேத பகுதி: ஆதியாகமம் 24:12–22*

*-K.Mohan, B.Komarapalayam*



அருமையான சிறு பிள்ளைகளே நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இம்மாதம் ரெபெக்காள் என்ற பெண்ணை பற்றி பார்ப்போம். ஆபிரகாம் தனது மகனான ஈசாக்குக்கு பெண் கொள்ளும்படி தன் வேலைக்காரனை தன்னுடைய தேசத்திற்கு அனுப்புகின்றான். தன்னுடைய எஜமானுடைய மகனுக்கு பெண் கொள்ளும்படி பத்து ஒட்டகங்களுடன் நாகோருடைய ஊருக்கு வருகிறான். மிகப்பெரிய பொறுப்பை கொடுத்த தன் எஜமானுக்கு நல்ல பெண்ணை தேர்ந்தெடுக்க விரும்புகிறான். அந்த ஊரின் தண்ணீர்த்துரவண்டையிலே நின்று மனதில் ஒரு முடிவு எடுக்கிறான். இங்கு தண்ணீர் எடுக்க வரும் பெண்களிடம் எனக்கு குடிக்க தண்ணீர் வேண்டும் என்பேன் யார் உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் தருகிறேன் என்று சொல்கிறாளோ, அப்பெண்ணையே நீர் தேர்ந்தெடுத்தீர் எனத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும் என்று வேண்டிக்கொண்டான்.

அப்பொழுது பெத்துவேலின் மகள் ரெபெக்காள் தண்ணீர் எடுக்க வந்தாள். அந்தப் பெண் மகா ரூபவதியும் புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள்; அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள். அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி; உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொன்னாள்.

அப்பொழுது அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானை விட்டு நீக்கவில்லை; நான் பிரயாணம்பண்ணிவருகையில், கர்த்தர் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டுவந்தார் என்றான். இப்படியாக ரெபெக்காளின் திருமணம் கர்த்தருடைய பிள்ளையோடு நடந்தது.

**மனப்பாட வசனம்**

"கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும்"

(ஆதி. 24:31)

## வேத அறிவுப் போட்டி எண்.79

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது; இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது; நடந்ததையோ தேவன் என்ன செய்வார்?
2. பலவிதமான அந்நிய போதனைகளால் என்ன செய்யாதிருங்கள் என்று யாருக்கு எழுதப்பட்டது?
3. சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் என்ன செய்வார்கள்?
4. நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய எந்தப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்?
5. இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் சொல்லியிருந்தார்?
6. எவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்?
7. இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே என்னவாகும் என்கிறார்?
8. தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் எப்படிப்பட்டவைகளே?
9. ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள் முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள் என்று எந்த தீர்க்கதரிசி சொன்னான்?
10. மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு என்னவுண்டு?


**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். வெளிப்படுத்தல் 3:5**

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: B.Arjunan.

R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without prepayment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th Mar. 2007.


**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**

**உங்கள் வானொலியில்**



இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்
மேலும்

**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும்
வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்


**மாத இதழ் மற்றும் வேதபாடம்**


தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.


THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202. S. India
Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in



Arjun-Glory

**Church of Christ Gospel Preachers**



First Row: L to R 1)B.Arjunan, Dindigul Dt.,
2) John Schwartz, Nagai Dt.,
3) P.Boopathi, Karur Dt.,
4) R.Fernandas, Dharmapuri Dt.,
5) D.David Doss, Cuddalore Dt.,
6) J.Alphons, Thiruvarur Dt.,
Sec. Row: L to R 7) Viji, Tuticorin Dt.,
8) S.Rajendran, Erode Dt.,
9)P.David Murugan, Pudukkottai Dt.,
10) Christy Kumar, Theni Dt.,
11) A.Prabakaran, Namakkal Dt.,
12) M.Rajamani, Tirunelveli Dt.,
13) P.Govindarajan, Thanjavur Dt.,

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202
S. India